# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :26 April 2025*  கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்
முனைவர் ஹ.விஜயலட்சுமி

பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்
ப.பிரபு

திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்
சா.ஜனார்த்தனன்

சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்
திருமதி நா.நித்யா

நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்
கி. ராஜ்குமார்

தர்காவும் விளிம்புநிலை மக்களும்
முனைவர் மௌ.அஸ்கர் அலி

இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்
முனைவர் நா. ஜிதேந்திரன்

சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு
ரா.சந்தியா

ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'
ரா.ஹேமா சிவகா

கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்
இரா.கலாவதி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்

**இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்**
ந.மஞ்சுளா

**மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்**
பத்மினி. S

**EASY LEARNING TECHNIQUES**
PROF. Dr. Er. S. HARI PRASAD

**Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools**
Kanapathipillai Gnanaretnam

**A Comparative Study Of Formal And Non-formal Education Systems**
Shiyani Thevaruban

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**

**The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu**
P.PRAVEENKUMAR

**Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums**
Dr. S.Udhaya Kumar.

**தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்**
முனைவர் செ. சாந்தி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# தர்காவும் விளிம்புநிலை மக்களும்

# Dargah and Marginal Peoples

*Dr.M.Askar Ali*
*Assistant Professor & Head*
*Achariya Arts and Science College*
*Puducherry — 605110.*

முனைவர் மௌ.அஸ்கர் அலி
தமிழ்த்துறைத் தலைவர்
ஆச்சாரியா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி — 605110.

**ஆய்வுச் சுருக்கம்.**

இஸ்லாமியர்களின் வாழ்க்கை உலகம் முழுவதிலுமே அடிப்படையில் சமயம் சார்ந்தது. அதைவிட மேலாக அச்“சமயச் சமூகம்” கற்பிக்கும் விதிகளுக்கு உட்பட்டது. இத்தகைய ஒரு சமய வாழ்வில் மையம் சார்ந்தவர்கள்xவிளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் என்ற இருமை நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. விளிம்புநிலைச் சமூகம் குறித்த புனைவுகளைப் படைப்புலகில் கொண்;டாடியவரான கீரனூர் ஜாகிர்ராஜா மேற்கண்ட மையம் x விளிம்பு என்னும் இருமை எதிர்வுகள் உண்டாக்கிய அதிர்வுகளை மொழிப்படுத்தியுள்ளார். மைய அரசியல் மனோபாவத்தின் விளைவாக உருவான பல்வேறு விளிம்புநிலையினரின் வாழ்க்கை இவரது புனைகதைகளில் பன்முகத் தன்மையுடையதாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான இஸ்லாமியப் புனைகதைகளில் அறிமுகமாகாத பாலியல் தொழிலாளர்கள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், கூலிகள், தரகர்கள், திருடர்கள், குடிகாரர்கள், மனநோயாளிகள், பிச்சைக்காரர்கள் முதலிய விளிம்புநிலை மாந்தர்களை ஜாகிர்ராஜா இலக்கியமாக்கியுள்ளார். அவற்றில் தர்காக்களில் வாழக்கூடிய விளிம்புநிலை மனிதர்களை மட்டும் இக்கட்டுரை ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

**திறவுச் சொற்கள்:**

இஸ்லாமிய இலக்கியம், கீரனூர் ஜாகிர்ராஜா, விளிம்புநிலைமக்கள், தர்கா

## Abstract

*The life of Muslims all over the world is fundamentally based on religion. More than that it is subject to the rules taught by the religious society. In such a religious life, the duality of those who belong to the center and those who are marginalized becomes inevitable. Keeranur Jahirraja, who has celebrated the myth of marginalized society in the creative world, has expressed the resonance created by the above binary opposites of center x edge. The lives of the various marginal that resulted from the centripetal attitude are depicted in a multifaceted manner in his fiction. Jahirraja has literaryized marginalized characters such as sex workers, homosexuals, coolies, brokers, thieves, drunkards, psychopaths, beggars, etc., which are unknown*

*in most Islamic fiction. Among them, this article examines only marginal people who live in dargahs.*

***Key Words**: Islamic literature, Keeranur Jahirraja, Subaltern People, Dhargah*

**முன்னுரை**

இஸ்லாமிய இறை நேசர்களின் அடக்கத்தலங்களாக விளங்கும் தர்காக்கள் அடித்தள மக்களின் பண்பாட்டுச் சின்னமாகத் தோற்றம் பெற்றுள்ளன. தர்கா பண்பாட்டைப் பின்பற்றும் அடித்தள இஸ்லாமியர்களை இழிந்தவர்களாக, இஸ்லாமியச் சமயத்திற்கு எதிரானவர்களாகக் கட்டமைக்கும் வகாபிசவாதிகளின் நவீனத் தீண்டாமைப் பார்வையாகவும் இது மாறியுள்ளது. தர்கா வழிபாட்டைக் குறித்துப் பெரியார் பின்வருமாறு கருத்துரைக்கின்றார்:-

"ஆனால் நான் இஸ்லாம் மதக் கொள்கைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டதாகவோ, எல்லாம் சுய மரியாதைக் கொள்கைகள் என்பதாகவோ யாரும் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோதமான கொள்கைகளைப் பார்க்கிறேன். இந்து மதத்தில் எதை எதை குருட்டு நம்பிக்கை, மூடப் பழக்கம், பாமரத் தன்மை என்கிறோமோ அவை போன்ற சில நடவடிக்கைகள் இஸ்லாம் மதத்திலும் சிலர் செய்கிறார்கள்"[1].

என்று குறிப்பிடுகிற பெரியார் அத்தகைய மூடப் பழக்கங்களாகச் சமாதி வணக்கங்கள், சந்தனக் கூடு, தீமிதி, கூண்டு உற்சவம், கொடி வணக்கம் முதலியவற்றைப் பட்டியலிடுகிறார்.

இறைவனைத் தவிர நபிகளிடமோ, வலிமார்களிடமோ நம்பிக்கை வைப்பது பல தெய்வ வணக்க நிலைக்குத் தள்ளி விடும். புனிதர்களின் சமாதிகளிலோ தர்காக்களிலோ விழா கொண்;டாடுதல், நேர்ச்சை வைத்தல், நோய்களைக் குணமாக்குவார்கள் என நம்பிக்கை கொள்ளுதல், பேய் பிடித்தவர்களுக்கு மந்திரம் செய்தல் உள்ளிட்டவைகள் இஸ்லாத்திற்கு எதிர் மறையானவை என இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கருதுகின்றனர். இவ்வாறு இஸ்லாமியச் சமூகத்திற்கு விரோதமான வழிபாட்டு முறையாகத் தர்கா வழிபாடு கருதப்பட்டாலும் இன்று அவ்வழிபாடு ஒரு பண்பாட்டுச் சின்னமாகப் பரிணாமம் பெற்றுள்ளது.

தர்கா ஆணின் ஊதாரித்தனத்திற்குப் பலியாகும் பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், அனாதைகள், நாடோடிகள், மன நோயாளிகள், பிச்சைக்காரரர்கள் முதலியோர்களுக்கு அடைக்கலம் தரும் இடமாக உள்ளது. தர்கா ஆதரவற்றுக் கிடக்கும் விளிம்புநிலை மக்களுக்குப் புகலிடமாய் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சென்னை நீலம் பாஷா தர்காவில் வாழும் இஸ்லாமியர்களைக் கீழ்க்கண்ட மூன்று விதமாகப் பிரித்துக் கொள்ளலாம்.

1. சாம்பிராணி புகை போடும் தட்டுக்களோடு கடைகளுக்குச் சென்று யாசகம் செய்வோர், விதவை, இளம் சிறார், முதியோர் எனப் பள்ளிவாசல், தர்கா வாசல்களில் உட்கார்ந்து யாசகம் பெறுவோர்.

2. திருமணம் உள்ளிட்ட விழாக்களுக்குப் பிரியாணி மற்றும் உணவு சமைக்கச் செல்லுவோர், சுண்ணாம்பு பெயிண்ட் அடிப்போர், ஆட்டோ ஓட்டுவோர், நகைப் பெட்டி ஒட்டும் வேலை செய்வோர்.

3. மெரினா கடற்கரையில் தள்ளுவண்டி பொருள் விற்பவர்கள், கடற்கரை மணலில் வடை, பஜ்ஜி சுட்டு விற்பவர்கள், மாட்டுக்கறியில் பக்கோடா செய்து விற்பவர்கள்.

தமிழகத்தில் உள்ள ஏர்வாடி, நாகூர், முத்துப்பேட்டை, கோவளம், மேலப்பாளையம், திருச்சி ஆகிய தர்காக்களில் வாழும் பெரும்பாலான விளிம்புநிலை மக்கள் எந்தவித வேலையும் இன்றி அங்கு வழங்கப்படும் இலவச உணவுகளை உண்டு காலம் தள்ளுபவர்களாக உள்ளனர். இவர்களின் வாழ்வில் வளர்ச்சி என்பதே இல்லை. இவ்வாறு தர்காக்களில் வாழும் விளிம்புநிலை மக்களைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது:-

1. தர்காவும் பெண்களும்
2. தர்காவும் பிச்சைக்காரர்களும்
3. தர்காவும் மன நோயாளிகளும்

**1. தர்காவும் பெண்களும்**

இஸ்லாமியப் பெண் என்பவள் அதிகாலை எழுந்திருந்து வீடு சுத்தம் செய்வது, சமையல் செய்வது, குழந்தையைப் பராமரிப்பது, கணவனுக்குப் பணிவிடை செய்வது என்று குடும்பத்திற்கான வீட்டு வேலைச் சுழற்சியில் கட்டமைக்கப்பட்டிருக்கிறாள். சமூக அளவில் வழங்கப்படும் குறைந்தபட்ச கல்விக்குப் பிறகு வீடு என்கிற நிறுவனத்திற்குள் சிறைபட்டுக் கிடக்கும் இஸ்லாமியப் பெண்ணுக்குத் தர்காக்கள் சமூக அளவில் வரையறுக்கப்பட்ட விடுதலையை உருவாக்கும் கேந்திரமாகச் செயல்படுகின்றன.

அவுலியாக்கள் எனப்படும் இறை நேசர்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்கள். இஸ்லாத்தை மக்கள் மத்தியில் நிறுத்திய மகத்துவத்திற்குரியவர்கள். இறை நேசர்கள் மக்கள் மத்தியில் பெற்றிருந்த செல்வாக்கின் காரணமாக அவர்களது சமாதிகள் மக்களின் தரிசனத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவையாக மாறி விட்டன. ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண் வள்ளிப் பீவியாக இஸ்லாத்திற்கு மாறியவள். அவளின் இறப்பிற்குப் பிறகு அவளுக்குத் தர்கா எழுப்பப்படுவது குறித்துக் கீரனூர் ஜாகிர்ராஜா பின்வருமாறு குறிப்பிடுகிறார்:-

"திருப்பூர் ஹஜ்ரத் வந்து தைரியமாக ஜனாஸா தொழுகை நடத்தினார். அவரைத் தொடர்ந்து மீன்காரத் தெரு ஜனங்கள் வள்ளியம்மாவுக்காக தொழுத கோலம் பேராச்சரியமானது. ஒருவாறு நல்லடக்கம் செய்யப்பட்டாள் வள்ளி பீவி. கல் பலகை அவள் பெயரைத் தாங்கி நின்றது கபுறுக் குழியில். வள்ளி பீவி என்று கிண்டலடித்த வாய்களைக் கிழித்தான் நைனா. வள்ளியின் கபுறு மீது கல்லெறிந்த மேற்குத் தெரு அப்துல் காதரின் கை வெட்டப்பட்டது. தொடக்கத்தில் ஏளனமாகவும்

பிறகு ஆச்சிரியமாகவும் வள்ளியின் கபுறைப் பார்த்தவர்கள் மெல்ல பயங்கலந்த பரவசத்துடன் அதைப் பார்க்கக் கற்பிக்கப்பட்டனர். காலப் போக்கில் வள்ளி பீவியம்மா என்று கபுறுக் குழியில் ஊதுபத்தி கொளுத்தி ஜியாரத் செய்யக் கூட ஒரு கூட்டம் தயாராக இருந்தது''[2].

மூதாதையர்களின் ஞாபகங்களோடும் வரலாற்றின் தடயங்களோடும் அடையாளப்படுத்தப்பட்ட வள்ளி பீவியின் கபுறு, ஒடுக்கப்பட்ட பெண்மணியை நிராகரித்த ஆதிக்கப் பண்பாட்டிற்கான எதிர் அடையாளமாகவே தென்படுகிறது. அடித்தள இஸ்லாமியர்களின் பண்பாட்டு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை இது குறிப்பதாக அமைந்துள்ளது.

இஸ்லாமிய மக்களின் வாழ்வோடும் உணர்வோடும் தர்காக்கள் ஒன்று கலந்துள்ளன. எனவேதான் தர்காக்களுக்கு எதிரான பிரச்சாரங்கள் அவற்றின் இருப்பினை அசைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. இதுவே அந்தந்த நாடுகளின், பகுதிகளின், வட்டாரப் பண்புகளை உள்வாங்கி நிறுவனச் சமய எல்லைகள் தாண்டி வெகுஜன மக்கள் மார்க்கமாக இஸ்லாம் வளர்வதற்கான மிக முக்கிய காரணமாகும். இஸ்லாமியப் பெண்கள் வார நாட்களில் வியாழன் இரவு தர்காக்களுக்குச் சென்று தங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தர்காக்களுக்குச் செல்லும் இஸ்லாமியப் பெண்கள் ஒரே தெருவில், ஒரே ஊரில் குடும்பங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிற பிற இஸ்லாமியப் பெண்களோடு தொடர்பு கொள்வதற்கும், உறவாடுதலுக்குமான இடமாகவும் தர்காவைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு விளிம்புநிலைப் பெண்களின் பாதுகாப்பிற்கும், நம்பிக்கைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கும் இடங்களாகத் தர்காக்கள் விளங்கி வருகின்றன.

**2. தர்காவும் பிச்சைக்காரர்களும்**

மனித வாழ்க்கையில் சுக போக வாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கும் இதே நாட்டில் தான் ஒரு வேளை கஞ்சிக்காகத் தனக்கான வாழ்வுரிமை, சுய மரியாதை, ஏன் தன்னுடைய வாழ்க்கையினையே தொலைத்து விட்டு அலைந்து கொண்டிருப்பவர்கள் பிச்சைக்காரர்கள். தமிழகத்தில் பெரும்பாலான தர்காக்களின் முற்றத்தில் முதியோர்கள், சிறுவர்கள், பெண்கள் என ஒரு கூட்டம் யாசகம் கேட்டு வாழ்க்கை நடத்துவதைக் காண முடிகிறது. அனாதைகளாக, ஆதரவற்றவர்களாக இருக்கும் இம்மக்களுக்குத் தர்காக்களே புகலிடங்களாக விளங்குகின்றன.

''வயது முதிர்ந்த இரண்டு பிச்சைக்காரர்கள் எவரோ தந்து சென்ற சில்லறையைப் பங்கிட்டுக் கொள்வதில் மும்முரம் காட்டினர்''[3] என்று பிச்சைக்காரர்கனின் வறுமை நிலையைப் பதிவு செய்துள்ளார் கீரனூர் ஜாகிர்ராஜா.

சமூகத்தில் பெற்றோர்களைச் சரியாகப் பராமரிக்காத பிள்ளைகள் கூடிக் கொண்டே செல்கின்றனர். ஆதரவற்ற நிலையில் இருக்கும் வயசாளிகள் பிச்சை எடுத்துக் கொண்டு தர்கா முற்றங்களில் வாழ்பவர்களாக இருக்கின்றனர். பிச்சைக்காரர்களின் பாதுகாவலனாகத் தர்காக்கள்

விளங்குகின்றன. தர்காக்களில் கிடைப்பதை வைத்து நசிவுக்குள்ளான வாழ்க்கையைப் போராட்டத்தோடு எதிர் கொள்ளும் விளிம்புநிலையினராகப் பிச்சைக்காரர்கள் கருதப்படுகின்றனர்.

**3. தர்காவும் மன நோயாளிகளும்**

தர்காக்களில் வாழுகின்ற மற்றொரு விளிம்புநிலை மாந்தர்களாக மன நோயாளிகள் அறியப்படுகின்றனர். இறை நேசர்களிடத்தில் நம்பிக்கை கொண்டு அடைக்கலம் நாடி வரும் மன நோயாளிகள் பல ஆண்டுகள் தங்கி நோயைக் குணப்படுத்திச் செல்கின்றனர். தமிழகத்தில் உள்ள ஏர்வாடி தர்காவில் ஏராளமான மன நோயாளிகள் குவிந்து கிடக்கின்றனர். இவர்களுக்கு நம்பிக்கை சார்ந்து நோய் தீர்க்கும் முறைகள் பின்பற்றப்படுகின்றன.

“மண்டைத் தினவெடுக்கையில் கொட்டமே அதிர்ந்து விடுமளவு ஓங்கி கூச்சலிடுகிறான். பிறகு ஈசாக் அண்ணனின் பிரம்பு பேசத் தொடங்கி விடுகிறது. அதற்கும் தான் வலி தாங்காமல் அரற்றுகிறான்”[4] என்று மன நோயாளிகள் அனுபவிக்கும் துயரங்களைக் கீரனூர் ஜாகிர்ராஜா பதிவு செய்கிறார்.

மன நோயாளிகளின் பாதுகாப்பு குறித்தும், மன நோயாளிகள் குணப்படுத்தப்படும் முறைகள் குறித்தும் பல்வேறு விவாதங்கள் தொடர்ந்து எழுந்து கொண்டே இருக்கின்றன. மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சங்கிலியால் கட்டப்பட்டு முடக்கப்படுவதும், பிரம்பால் அடித்து அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுவதுமாக உள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு ஏர்வாடி தர்காவில் பாதுகாப்பற்ற நிலையில் செயல்பட்ட மனநலக் காப்பகத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஏராளமான மன நோயாளிகள் எரிந்து சாம்பலாகினர். அவர்கள் அனைவரும் சங்கிலியால் கட்டப்பட்டிருந்ததால் தப்பிக்க வழி ஏற்படாமல் போய் விட்டது.

“பெட்லம், பைசட்ரே போன்ற இடங்களை ஒப்பிடும் போது ஏர்வாடி நடைமுறைகள் குறைவுதான். நாகூரிலும் கூட மன நோய்க்காரர்கள் உள்ளனர். தஞ்சாவ+ருக்கருகில் மானாங்கோரை என்னும் சிற்றூர். இவ்வாறு தமிழ் நாட்டில் அனேக இடங்கள் உள்ளன”[5] என்று மன நோயாளிகள் குறித்துக் கீரனூர் ஜாகிர்ராஜா பதிவு செய்கிறார்.

**முடிவுரை:**

இஸ்லாமியச் சமூகத்திலிருந்து வெளியுலகில் சுதந்திரமாகச் சஞ்சரிக்கும் அலிமா எனும் கதை மாந்தரை மையமாகக் கொண்டது வடக்கேமுறி அலிமா நாவல். அலிமாவை மனம் பிறழ்ந்தவளாகக் கொள்வதைவிடக் கட்டுப்பாடுகளை மீறித் தான் நினைப்பதை மிக யதார்த்தமாக வெளிப்படுத்தும் தன்மை கொண்டவளாகப் புரிந்து கொள்ள முடிகிறது. உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு மனநலக் காப்பகத்தில் இருந்த அலிமா ஏராளமான கொடுமைகளுக்கு ஆளாகுபவளாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறாள். மனப் பிழற்வுப் பெண்ணாகத் தமிழகத்தின் அநேகத் தர்காக்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றாள் அலிமா. அங்கெல்லாம் நடக்கும் கொடுமைகள் பயங்கரமானவைகளாக அலிமாவுக்குத் தோன்றுகின்றன. அலிமாவைப் போல் மனநோயால் பாதிக்கப்பட்டு ஏராளமானனோர் தர்காக்களில் முகாமிட்டிருப்பதும், அவர்கள் ஒரு விலங்கைப் போல் பாவிக்கப்படுவதும் சமகாலம்

வரைப் பெருகிக் கொண்டுதான் இருக்கின்றது. அடித்தள மக்கள் தர்காக்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையை எளிதில் புறந்தள்ளிவிட முடியாது. பொருளாதாரத்தில் நலிந்த உழைக்கும் மக்களின் தர்கா பண்பாட்டு நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. *அ.மார்க்ஸ், பெரியார்: தலித்துகள் முஸ்லிம்கள், ப.76.*
2. *கீரனூர் ஜாகிர்ராஜா, மீன்காரத் தெரு, ப.104.*
3. *கீரனூர் ஜாகிர்ராஜா, செம்பருத்தி பூத்த வீடு, ப.124.*
4. *கீரனூர் ஜாகிர்ராஜா, கருத்த லெப்பை, ப.37.*
5. *கீரனூர் ஜாகிர்ராஜா, வடக்கேமுறி அலிமா, ப.38.*

***Referecnces***


1. *A.Marx, Periyar: Dalits, Muslims P.76*
2. *Keeranur Jahirraja, Meenkara Theru, P.104.*
3. *Keeranur Jahirraja, Semparuthi Pootha Veedu, P.124.*
4. *Keeranur Jahirraja, Karutha Labbai, P.37.*
5. *Keeranur Jahirraja, Vadakaemuri Valima, P.38.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com